# குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 31-10-2022 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

## நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி பகுதியில் வெட்டுமணி முதல் பம்மம் வரையிலான தேசிய நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கும் நடந்து செல்வதற்கும் கூட முடியாத சூழ்நிலையில் உள்ளது. பலமுறை மனு கொடுத்தும், அதிகாரிகளை நேரடியாக சந்தித்தும், பல கட்டங்களாக வலியுறுத்தியுள்ளோம். இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் இல்லாமல் உள்ளது. ஆகவே பொதுமக்கள் உயிருடன் விளையாடாமல் உடனடியாக சாலை பணியை செய்து முடிக்க நெடுஞ்சாலை துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 286 - (1) தீர்மானிக்கப்பட்டது.

2) 4-வது வார்டில் கலையன்குளம் பகுதியில் சாலையின் நடுவில் அமைந்துள்ள மின்கம்பத்தை (P-44) மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 286 - (2) தீர்மானிக்கப்பட்டது.

3) மார்த்தாண்டம் பேருந்து நிலைய பிரதான கட்டிட மாடியில் மாணவ, மாணவியரின் கல்வி திறனை மேம்பாடுத்திட டிஜிட்டல் நூலகம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 286 - (3) தீர்மானிக்கப்பட்டது.

## 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V. விஜு கொண்டு வரும் தீர்மானம்

1) திருத்துவிளாகம் சாலையில் மாறாசேரி மடம் அருகில் இரண்டு மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண். 287 - (1) தீர்மானிக்கப்பட்டது

<u>10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நகராட்சி எல்கைக்குட்பட்ட பிரிட்ஜ் வார்டில் அரசு மேல்நிலை பள்ளி விளவங்கோடின் தெற்கு பகுதி மதில் சுவர் கூம்பு வடிவில் உள்ளது. மேற்படி சுவரினால் பக்கத்து நகராட்சி சாலையின் மூன்று சக்கர வாகனம் கூட செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே மேற்படி மூலைப்பகுதியை மாற்ற அந்த பகுதி ஊர்மக்கள் சார்பாக சுவரை மாற்றம் செய்து கட்டி கொடுக்க தயாராக உள்ளனர். இதனால் பள்ளி கூடத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. எனவே இதற்கான அனுமதியை பெற பொதுப்பணித் துறையையும், வருவாய் துறையையும் கேட்டு இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 288 - (1) தீர்மானிக்கப்பட்டது.

2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தில் 10-வது வார்டில் குடிநீர் குழாய் பதிக்காத இடங்களில் குடிநீர் குழாய் பதிக்கவும் அனைத்து வீடுகளுக்கும் இணைப்பு வழங்கவும் இந்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 288 - (2) தீர்மானிக்கப்பட்டது

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) தெருவிளக்கு - சீரான் விளையில் செல்லும் பாதையில் ஒரு தெருவிளக்கும் இல்லை. அதனால் புதிதாக ஒரு மின்கம்பம் போட்டு அதில் தெருவிளக்கு போட்டு கொடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 289 - (1) தீர்மானிக்கப்பட்டது

2) கடலை கம்பெனியின் முன்பக்கம் போகும் சாலை காமனாட்டுவிளை செல்லும் பாதையில் ஒரு கிணறு கிடக்கிறது. அது மக்களுக்கு போக்குவரத்துக்கு இடஞ்சலாக உள்ளது. அதை மூட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 289 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) ரோடு - கான்வென்று ரோடு, ஒடை ஒன்றும் சரி செய்யாமல் மிகவும் மேசமாக உள்ளது. அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 289 - (3) தீர்மானிக்கப்பட்டது

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சியில் ஏழை மக்கள் பாதிக்கப்படும் வகையில் நகராட்சி சட்டம் மற்றும் நகரமைப்பு விதிகளை மீறி பிரிக்கப்பட்டுள்ள Zone A, B, C-யை சட்ட விதிகளுக்கு உட்பட்டு மாற்றி அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டு அனுமதி பெற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 290 - (1) தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள பொருட்கள் காலியான நிலையில் உள்ள காரணத்தால் அவசரம் கருதி கூட்டுறவு அச்சகம் மூலம் பெறுவதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | பிறப்பு திருத்தம் படிவம் | - 5000 Nos. |
| 2) | One quire Note | - 100 Nos. |
| 3) | மூடு தாள் | - 5000 Nos. |
| 4) | Bill Roll | - 1000 Nos |
| 5) | Two quire Note | - 50 Nos. |
| 6) | Three quire Note | - 50 Nos. |

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.180/2007/டி2.

மன்றத்தீர்மான எண். 291 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக வளாகத்தில் வெட்டி வைக்கப்பட்டுள்ள இலவு மரங்களை விற்பனை செய்ய 07-10-2022 அன்று ஏலம் கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.எஸ். பாபு மட்டும் கலந்து கொண்டு ஏலத்தொகையாக ரூ.250/- கோரியுள்ளார். எனவே வெட்டி வைக்கப்பட்டுள்ள இலவு மரங்களை திரு.எஸ். பாபு அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 29-09-2022 அன்று நடைபெற்ற தல ஆய்வின்போதில் தேவையற்ற பொருட்களை நீக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டதினால் நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திரு.எஸ். பாபு என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2260/2021/ந.அ.ஆ.

மன்றத்தீர்மான எண். 292 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார லாரி TN.75.M.8752-க்கு 2021-2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்று 08-11-2022 அன்றுடன் முடிவடைய உள்ளதால் மேற்படி தகுதி சான்று பெறுவது முன்னிட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம ரூ.1,38,355/- ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2844/2013/இ1

மன்றத்தீர்மான எண். 293 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கட்டிடத்திலிருந்து பலகழிவுநீர், மழைநீர் வடிகாலில் விடுவதை தவிர்ப்பது மற்றும் பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவதை தவிர்ப்பது விளம்பரம்

30-08-2022-ம் தேதி மாலைமலர், 31-08-2022 தினமலர் மற்றும் 01-10-2022 தினதந்தி தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

1) தினமலர் - ரூ.13,440
2) மாலைமலர் - ரூ. 9,912
3) தினதந்தி - ரூ. 9,840

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**3767/2022/**எச்**1.

மன்றத்தீர்மான எண். 294 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் தினசரி உருவாகும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்யும் பணிகளுக்கு தற்போது 3 லாரிகளும், 2 LCV-யும் உள்ளது. மேலும் இரண்டும் LCV தேவைப்படுகின்றது என்பதை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு தேவைபட்டியல் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை இயக்கிட ஏழு வாகன ஒட்டுநர்கள் தேவைபடுகின்றது. தற்போது நகராட்சியில் மூன்று வாகன ஒட்டுநர்கள் பணி புரிந்து வருகின்றார்கள். மேலும் 4 ஒட்டுநர்கள் தேவைப்படுவதால் மேற்படி ஒட்டுநர்களை முன்னாள் படைவீரர் நலவாரியத்தின் வாயிலாக பணி அமர்த்திடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> பொது சுகாதார அத்தியாவசிய அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று Texco நிறுவனத்தினரிடம் விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.எச்**1/3892/2022.

மன்றத்தீர்மான எண். 295 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் சீருடை பணியாளர்கள் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர், தூய்மை பணி மேற்பார்வையாளர், மகப்பேறு உதவியாளர், பொறியியல் பிரிவு பணியாளர்கள் (மின்கம்பி உதவியாளர், குடிநீர் திட்ட பணியாளர்) 2022-2023-ம் ஆண்டிற்கான காலணிகள் மற்றும் சீருடைகள் மற்றும் தையல் கூலி உட்பட வழங்கிடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மேற்படி சீருடைகளை மற்றும் காலணிகள் காதிகிராம தொழில்வாரியம், நாகர்கோவில் மூலம் கொள்முதல் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அ.கு.:- தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு சீருடைகள் உடன் வழங்க வேண்டியுள்ளதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி சீருடைகள் மற்றும் காலணிகள் கொள்முதல் செய்ய வினியோக உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.எச்1/3893/2022.

மன்றத்தீர்மான எண். 296 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சியில் பணிகள் செய்த ஒப்பந்தக்காரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி, அவரவர் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வகையில் திரு. வின்ஸ்ராஜ் என்பவருக்கு ரூ.21,200/-ஐ வழங்க மன்றம் அனுமதிக்கு.

அ.கு.:- அனுமதிக்கலாம்.
ந.க.எண்.781/2019/பி1.

மன்றத்தீர்மான எண். 297 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்பம்மம் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை தூய்மை இந்திய திட்டம் 2018-2019-ன் கீழ் Biomining process மூலம் அப்புறப்படுத்த ரூ.91.00 இலட்சம் மதிப்பீட்டில் மறு ஒப்பந்தப்புள்ளி 29-09-2022 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விவரம் கீழ்கண்டவாறு.

1) Prago green Enviro Pvt. Ltd., Nagercoil 1.33% மதிப்பீட்டை விட அதிகம்

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.33% அதிகமாக உள்ளமையால் விலைகுறைப்பு செய்வது தொடர்பாக 10-10-2022 அன்று Prago green Envior Pvt. Ltd., Nagercoil-1-க்கு விலை குறைப்பு அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அறிப்பின்படி ஒப்பந்ததாரர் மதிப்பீடு விலை விகிதத்தில் சம்மத கடிதம் 13-10-2022 அன்று கொடுத்துள்ளார். எனவே ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விலை விகிதத்தில் வேலையை Prago green Envior Pvt. Ltd. என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- திட்டப்பணியாக இருப்பதினாலும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1230/2018/இ1.

மன்றத்தீர்மான எண். 298 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்பம்மம் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio-mining process மூலம் அப்புறப்படுத்துவதற்கான பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி 26-08-2022 மற்றும் 20-09-2022 அன்று நடைபெறும் விவரத்தினை மாநில அளவில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) Bright Advertising - 53,340
2) Vipras Adz - 43,260

மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1230/2018/இ1.

மன்றத்தீர்மான எண். 299 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 10

மார்த்தாண்டம் மீன் சந்தையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் பொது கழிப்பிடத்தினை பொது மக்கள் பயன்படுத்தும் பொருட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 870/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 300 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 11

இந்நகராட்சிக்கு சொந்தமாக உள்ள கல்பாலத்தடியில் உள்ள கட்டண கழிப்பறைக்கு திரு. ராஜாமணி செலுத்திய வைப்புத் தொகை ரூ.25,000/-ம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.:- அனுமதிக்கலாம்.
ந.க.எண். 3048/2022/பி2.

மன்றத்தீர்மான எண். 301 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் B பிளாக் கடை எண்.10-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.எஸ். முத்துகிருஷ்ணன் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ். முத்துகிருஷ்ணன் | 2012-2013 | B10 | 2,55,000 | Page No.181, Sl.No.23 |

ந.க.எண்.3415/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 302 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வார்டு வரையுள்ள பகுதிகளில் மொத்தம் 1773 எண்ணிக்கை தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதில் 60 LED விளக்குகள் போக மீதமுள்ள 1713 விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்றி மின் சேமிப்பு செய்யும் வண்ணம் “மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ்” (SUIDF) ரூ.198.45 இலட்சம் கடன் தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடனை 6 வருடங்களில் வருடத்திற்கு 5 சதவீதிம் வட்டியுடன் திருப்பி வழங்க வேண்டியுள்ளது. எனவே இதற்கென பிரேரணை தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1966/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 303 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வார்டு வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத மின்கம்பங்களில் புதியதாக 326 LED விளக்குகள் பொருத்தும் வண்ணம் "மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ்" (SUIDF) ரூ.78.33 இலட்சம் கடன் தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடனை 6 வருடங்களில் வருடத்திற்கு 5 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும். எனவே இதற்கென பிரேரணை தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3968/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 304 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் B பிளாக் கடை எண்.1-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.எம். ரவிசந்திரன் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.எம். ரவிசந்திரன் | 2014-2015 | B1 | 2,84,000 | Page No.188, Sl.No.63, 75 |

ந.க.எண்.3414/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 305 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் B பிளாக் கடை எண்.2-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.எம். செல்வராஜ் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.எம். செல்வராஜ் | 2014-2015 | B2 | 1,46,000 | Page No.189, Sl.No.74 |

**ந.க.எண்.**3413/2022/**அ**2.

மன்றத்தீர்மான எண். 306 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக வளாகத்தில் உள்ள பயன்படுத்த முடியாத பழைய டயர்கள் 47 எண்ணத்திற்கு விற்பனை செய்ய 14-10-2022 அன்று ஏலம் கோரப்பட்டதில் ஒரே ஒரு நபர் திரு.பீர் முகம்மது மட்டும் கலந்து கொண்டு ஏலக்கேள்வி தொகை ரூ.11000/- கோரியுள்ளார். எனவே 47 எண்ணம் பழய டயர்களை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**140/2021/**இ**1.

மன்றத்தீர்மான எண். 307 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண். 18

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பயன்படுத்த முடியாத பழைய டம்பர் பின்கள் விற்பனை செய்ய 14-10-2022 அன்று ஏலம் நடைபெற்றதில் ஒரே ஒரு நபர் திரு.பீர் முகம்மது மட்டும் கலந்து கொண்டு ஏலக்கேள்வி தொகையாக ஒரு டம்பர் பின்னுக்கு ரூ.4000/- விகிதம் 12 எண்ணம் டம்பர் பின்களுக்கு ரூ.48000/-த்திற்கு ஏலக்கேள்வி தெரிவித்துள்ளார். எனவே பயன்படுத்த முடியாத பழைய டம்பர் பின்களை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.140/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 308 - மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கல்லுக்கெட்டியில் சர்வே எண்.A1/92 (பகுதி)-யில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3347/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 309 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 20

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.A3/19-ல் அமைந்துள்ள இடைக்குளம் குளத்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் மேம்பாடு செய்ய ரூ.34.00 இலட்சத்திகு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இப்பணிக்கு பிரேரணை தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3606/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 310 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.21</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு லாறி TN.75M-4923-க்கு 2022-2023-ம் ஆண்டிற்கான தகுதி சான்று 28-10-2022 அன்றுடன் முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதை முன்னிட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.34000 ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பொது சுகாதார அத்தியாவசிய அவசியத்தினை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2295/2018/இ1.

மன்றத்தீர்மான எண். 311 - அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 பெருந்தெருவில் உள்ள பிள்ளையார் கோவில் முதல் பெருந்தெரு சுகாதார மையம் வரை சுமார் 115 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு விளையும் வண்ணம் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற உறுப்பினரால் கொண்டு வரப்பட்ட பொருள்மீது தீர்மானம் எண்.62(4), நாள் 29-04-2022-ன்படி நிறைவேற்றப்பட்டதற்கிணங்க ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி நகராட்சியின் நிதிநிலையை பொறுத்து பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1564/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 312 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.23

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 பெருந்தெருவில் உள்ள ஈஸ்வரமூர்த்தி வீடு முதல் உண்டனாகுழி வரையில் 125 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் ஒடை பழுதடைந்து நீர்தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. இப்பணியினை மேற்கொள்ள நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினரால் கொண்டு வரப்பட்ட பொருள்மீது தீர்மானம் எண்.62(4), நாள் 29-04-2022-ன்படி நிறைவேற்றப்பட்டதற்கிணங்க ரூ.9.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி நகராட்சியின் நிதிநிலையை பொறுத்து பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1416/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 313 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 24

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியிலுள்ள காய்கறி சந்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக காய்கறி சந்தை கட்டுவதற்கென கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.423.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்க்கண்ட பணிகளுக்கான வடிவமைப்பு நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி அவர்களின் ஆய்வின் போது புதியதாக வடிவமைப்பிற்கு நிர்வாக அனுமதி பெற்று தருமாறு கோரப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கலந்து ஆலோசித்து திருத்திய வடிவமைப்பில் பிரேரணை மீள சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரில் Reform Design & Planning Cell Pvt. LTD Gujarath அவர்களிடம் ஒப்படைத்து திருத்திய பிரேரணை தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ,அந்நிறுவனத்திடம் பணியை மேற்கொள்ள ஆலோசனை கட்டணமாக நிர்வாக அனுமதி தொகையில் 1% வழங்கிட நகர்மன்ற தீர்மானம் எண்.244, நாள் 15-04-2022-ன்படி அனுமதிக்கப்பட்டு வேலை உத்திரவு Reform Design & Planning Cell Pvt. LTD Gujarath என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. மேற்படி அந்நிறுவனம் 1% நிர்வாக அனுமதிக்கப்பட்டுள்ள தொகையில் தினசரி காய்கறி சந்தை கட்டுதல் பணிக்கான ஆலோசகராக ஏற்க மறுத்த காரணத்தினால் வேறு ஆலோசகர் மூலம் பணியினை மேற்கொள்ளவும் திருத்திய மதிப்பீடு மற்றும் வரைப்படம்

தயாரிப்பதற்கென தனியார் ஆலோசகர் மூலம் மேற்கொள்ள 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவர்களின் விவரம் கீழ்கண்டவாறு

1) Glency DOCMRA Consultants India Pvt. Ltd., Chennai. 1% Project cost + GST 18%
2) Eclat Design's and Infrastructure Pvt.Ltd., Chennai- 1.50% Project Cost + GST 18%
3) Maxcon Town Planning and Development 1.75% Project cost and GST 18%

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி வழங்கிய Glency DOCMRA Consultants India Pvt. Ltd., Chennai அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- திட்டபணியாக இருப்பதினாலும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று Glency Docmra Consultant India Pvt. Ltd.. Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1967/2021/இ1.

மன்றத்தீர்மான எண். 314 - அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.25

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள பாலவிளை சாலையானது குடிநீர் திட்ட பணிகள் காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்க்கண்ட சாலையினை கான்கிரீட் சாலையாகவும் மற்றும் Paver Block சாலையாகவும் சீரமைத்து மாற்றம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.35,50,000/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3997/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 315 - அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.